18.11.2025.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)
விழுப்புரம்.

**OS.435/2023**

**வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | | |
| த/பெ | தேவராஜ் | மதம் | |
| கிராமம் | பி.நத்தமேடு | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 52/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 18.11.2025 |

இன்று சாட்சி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் அசல் வழக்கில வாதி தரப்பு சாட்சி 1 ஆவேன். நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன், நான் சொன்ன விபரம் அடிப்படையில் நிரூபணவாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. நான் படித்துப்பார்த்தேன் விபரம் சரியாக உள்ளது. கையொப்பம் போட்டேன். 20.10.2008ந் தேதியில் வாதிக்கு பிரதிவாதிகளுக்கும் இடையே வீட்டை மட்டும் குறித்து ஏற்படுத்தப்பட்ட பாகபிரிவினை ஆவணம் கணினிநகல் வா.சா.ஆ. 1 ஆகும். 16.04.2012ந் தேதியிட்ட 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணம் கணினி நகல் வா.சா.ஆ.2 ஆகும். 16.04.2012ந் தேதியிட்ட 3ம் பிரதிவாதி பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணம் கணினி நகல் வா.சா.ஆ.3 ஆகும். 16.04.2012ந் தேதியிட்ட 4ம் பிரதிவாதி பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணம் கணினி நகல் வா.சா.ஆ.4 ஆகும். 13.10.2023ந் தேதியில் வாதி தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ. 5 ஆகும்.

04.11.2023ந் தேதியில் பிரதிவாதிகளின் வழக்கறிஞர் வாதியின் வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில்அறிவிப்பு வா.சா.ஆ. 6 ஆகும். 15.09.2023ந் தேதியில் 11ம் அயிட்ட சொத்துக்கான வில்லங்க சான்று வா.சா.ஆ.7 ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

**குறுக்கு விசாரணை**

**இல்லை.**